பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விழுயல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 04 ஞாயிற்றுக்கிழமை 18.05.2025 கதிர் 190

## இனி இது ரகசியம் அல்ல!

வெண்ணெய்திரண்டுவரும்போது தாளியை உடைப்பது என்று சொல்வார்கள். நுணலும்தன்வாயால் கெடும்என்றும்சொல்வார்கள். இவை இரண்டும் தற்போது தமிழ் ☞2

## ரணில் மறுப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவின் விவகாரத்தில், இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு முன்வைத்துள்ள கூற்றுக்களை முற்றாக மறுத்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீதிமன்ற சமர்ப்பிப்புகள் தன்னைப் பற்றி தவறாக வழிநடத்துவதாகவும் அவற்றில் சட்டப்பூர்வமாக குறைபாடுகள் உள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். ☞8

# தமிழினப்படுகொலை நினைவேந்தல் இன்று

## முள்ளிவாய்க்காலில் முதன்மை நிகழ்வு

2009ஆம் ஆண்டு போரின் இறுதியில் நிகழ்ந்தேறிய மனிதப் பேரவலத்தினை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் மே -18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்நிகழ்வு உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இம்முறையும் 16ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு, வடக்கு,கிழக்கு மற்றும் கொழும்பில் பல்வேறு நினை வேந்தல் நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் ஏற்பாட்டில் பிரதான நினைவேந்தல் நிகழ்வு முள்ளிவாய்க்கால் நினைவுத்திடலில்முன்னெடுக்கப்படவுள்ளது.

காலை10.15இற்கு கொள்கைப்பிரகடனம் வாசிக்கப்பட்டு, 10.29இற்கு நினைவொலி எழுப்பப்படும். 10.30இற்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு தொடர்ந்து பொதுச்சுடர் ஏற்றப்படும்.

பொதுச்சுடர் ஏற்றப்படும் சமநேரத்தில் ஒற்றைச்சுடர்களும் ஏற்றப்படும். அதனை யடுத்து மலர் அஞ்சலி செலுத்துவதுடன் நினைவேந்தல் நிகழ்வு முடிவுக்கு ☞2

## ஆவா குழுவின் தலைவரை நாடு கடத்தக் கோரிக்கை

பிரான்ஸின் பாரிஸ் நகரில் நடந்த மோதல் தொடர்பாக கனடாவில் கைது செய்யப்பட்ட குற்ற கும்பலின் தலைவர் என நம்பப்படும் இலங்கையர் ஒருவரை பிரான்ஸுக்கு நாடுகடத்துமாறு கனேடிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் ஆவா கும்பலின் தலைவன் எனக் கூறப்படும் 'பிரசன்னா நல்லலிங்கம்' என்ற அஜந்தன் சுப்பிரமணியம் என்பவர் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் கனடாவின் டொராண்டோவில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

இவர் 2021ஆம் ஆண்டு ☞8

# வன்முறையைத் தூண்டாத நினைவுகூரலை மதியுங்கள்

## மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸாருக்கு அறிவுரை

நினைவுகூரல் நடவடிக்கைகள் 'இழப்புக்கான எதிர்ட்டின்' ஓரங்கமாகும். எந்த சமூகத்தை அல்லது அரசியல் நம்பிக்கையை சேர்ந்தவர்களாக இருப்பினும், அவர்கள் தமது அன்புக்குரியவர்களை இழந்த துயரைப்பகிர்ந்துகொள்வதற்கும், அவர்களை நினைவுகூருவதற்குமான வாய்ப்பைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர். இன, மதவெறுப்பைஊக்குவிக்காதமற்றும்பகைமை அல்லது வன்முறைக்குத் தூண்டுதலாக அமையாதநினைவுகூரல்நடவடிக்கைகளுக்கு பொலிஸார் மதிப்பளிக்கவும், அவற்றைப் பாதுகாக்கவும் வேண்டுமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பதில் பொலிஸ்மா அதிபரிடம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினால் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில் மேலும் தெவிக்கப்பட்டிருப்பதாவது;

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த ஆண்டு மே மாதம் நடைபெற்ற நினைவுகூரல் நிகழ்வுகளுடன் தொடர்புடைய ☞2

## மின் கட்டணத்தை 18 % அதிகரிக்கக் கோரிக்கை

### மின்சார சபை முன்மொழிவு

செலவுகளைப் பூர்த்தி செய்வதற்காக மின் கட்டணத்தை 18.3 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டுமென இலங்கை மின்சாரசபை யோசனையொன்றை முன்வைத்துள்ளது.

மின்சாரசபையின் இந்த யோசனை குறித்து ஜூன் முதல் வாரத்தில் தீர்மானிக்கப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சாரசபையின் இடைக்கால நிதி அறிக்கையின்படி, 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 18 பில்லியன் ரூபா இழப்பை ஏற்பட்டுள்ளது. 2023 ஆம் ☞2

## மக்களின் பிரச்சினைகளுக்கு ஆட்சியாளர்களிடம் தீர்வில்லை

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

தற்போதைய ஆட்சியாளர்கள் பேசுவதில் மிகவும் திறமையானவர்களாக இருந்தாலும், மக்களின் பிரச்சினைகளுக்கு அவர்களிடம் பதில்களோ தீர்வுகளோ இல்லை. இவ்வாறானவர்களின் அச்சுறுத்தல்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் அஞ்சாது என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொழும்பு 'மல்லிகாராம வீடமைப்புத் தொகுதி' மக்களுடன் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ☞8

## ஐக்கிய மக்கள் சக்தியை சீரமைப்பது அவசியம்

### கலகக் குரல் எழுப்பும் சமிந்த எம்.பி.

ஐக்கிய மக்கள் சக்தி அடுத்து ஆட்சியைக் கைப்பற்றக்கூடிய பலம் மிக்க சக்தியாக உருவாக வேண்டும். அதற்குக் கட்சிக்குள் மறுசீரமைப்புக்கள்மேற்கொள்ளப்படவேண்டும். ஹர்ஷடிசில்வாஉள்ளிட்டவர்களுக்குகட்சியில் மேலும்உயர்வடைவதற்கானவாய்ப்புக்களை தலைமைத்துவம் வழங்கவேண்டும். ஐக்கிய மக்கள் சக்திக்கு தற்போது இளம் தலைமைத்துவம் அத்தியாவசியமானது என நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ☞2

## பொதுப் போக்குவரத்தில் உள்ளவை பயணிகள் பேருந்துகளே இல்லை

### அவை லொறிகள் என மருத்துவ சங்க முன்னாள் தலைவர் சாடல்

இலங்கையில் பயணிகள் போக்குவரத்துக்குபயன்படுத்தப்படுபவை பேருந்துகள் அல்ல அவை லொறிகளாகும். லொறியின் உடல் பாகத்தைக் கொண்டு அவை வடிவமைக்கப்பட்டுள்ளது. 'பயணிகள் பஸ்' என்பதே பேருந்து. பேருந்துகளின் இறக்குமதிக்கு அதிகளவான தீர்வை வரி அறவிப்படுவதால், பயணிகள் போக்குவரத்துக்கு லொறிகளை கொள்வனவு செய்யப்படுகிறது என்று இலங்கை மருத்துவ சங்கத்தின் முன்னாள் தலைவர், விசேட வைத்திய நிபுணர் பேராசிரியர் சமத் தர்மரத்ன தெரிவித்தார்.

வீதி விபத்துக்கள் நிவாரணம் தொடர்பில் இலங்கை மருத்துவ சங்கத்தில் வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

விபத்துக்களை குறைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கான முறையான திட்டம் ஒன்றையும், அதிகாரமிக்க தீர்மானங்களையும் முன்னெடுக்கக்கூடிய தேசிய மட்டத்திலான குழுவை நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாட காலவகாசம் வழங்குமாறு இரு முறை ☞8

## தேசிய போர் வீரர்கள் நாள் கோட்டையில் நாளை நிகழ்வு

### அனைத்து மக்களையும் ஒற்றுமையோடு நிற்க அழைக்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலர்

உள்நாட்டுபோர்நிறைவடைந்து16ஆண்டுகள் நிறைவடைந்துள்ளநிலையில்,நாளைதிங்கட்கிழமை கோட்டை ஸ்ரீ ஜெயவர்தனபுரவில் உள்ள தேசிய போர் வீரர் நினைவுத் தூபியில் தேசிய போர் வீரர் நினைவு நாள் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற எயார் வைஸ் மார்ஷல்சம்பத்துய்யகொந்தா தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் கேட்போர் ☞2

## தொடருந்து நிலைய அதிபர்கள் நேற்று திடீர் வேலை நிறுத்தம்

### நீண்ட தூர சேவைகள் முற்றாகப் பாதிப்பு

தொடருந்து நிலைய அதிபர் சங்கம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் முன்னெடுத்த அடையாள வேலை நிறுத்த போராட்டத்தினால் நேற்றையதினம்சகலநீண்டதூரதொடருந்து ☞8

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

அரசுக்கட்சிக்குள்அதன்நாடாளுமன்றக்குழுத் தலைவர் சிறீதரனுக்கே சாலப் பொருந்தும்.

வடக்கில் கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு சபைகளில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனித்து ஆட்சி அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மையோடு வெற்றி பெற்றுள்ளது. மற்றைய சபைகளைப் போன்று வேறு கட்சிகளின் ஆதரவுக்காகக் காத்திராமல் தனியாகவே தவிசாளர், உப தவிசாளர்களைப் பெயரிட்டு ஆட்சியை ஜூன் 2 முதல் தொடங்க முடியும்.

அப்படி தவிசாளரதும் உப தவிசாளரதும் பெயர்களை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் கட்சிகளின் செயலாளர்களுக்கே உரிய உரித்து. அதனைப் பயன்படுத்தி கிளிநொச்சி சபைகளுக்கு தலைவர் சிவஞானமும் செயலாளர் சுமந்திரனும் யாரையாவது நியமித்துவிட்டாலும் என்ற பயத்தில், தனக்கு வேண்டியவர்களை, தனது தீவிர விசுவாசிகளை கிளிநொச்சியிலுள்ள மூன்று சபைகளுக்கும்பெயரிட்டு, மாவட்டக்கிளையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகக் காட்டி அது தொடர்பான ஒரு கடிதத்தை தலைவரிடம் எடுத்துவந்துகொடுத்திருந்தார்சிறீதரன். அவசர அவசரமாக அதனை ஊடகங்களூடாகவும் வெளிப்படுத்தியிருந்தார்.

இது நிகழ்ந்து கிட்டத்தட்ட ஒரு வாரமாகிவிட்டது. சிறீதரனின் அவசரமும் துடுக்குத்தனமும் கட்சியின் தலைவருக்கும் செயலாளருக்கும் தெரிந்திருந்தாலும் முரண்பாடுகள் வேண்டாம் என்று நினைத்த தலைவர், சிறீதரனின் கடிதத்தை சுமந்திரனிடம் எடுத்துச் சென்று அவரோடு பேசி சம்மதிக்க வைத்து சிறீதரனின் பரிந்துரைப்படியே அங்குள்ள இரு சபைகளுக்குமான தவிசாளர்களை ஆணைக்குழுவிற்குப் பரிந்துரைக்கலாம் என்று முடிவு செய்தார். சுமந்திரனும் அதற்குச் சம்மதித்தார்.

தவிசாளர்களின் பெயர்களை ஆணைக்குழுவிற்கு அறிவிக்கும் கடிதமும் தயார்ப்படுத்தப்பட்டன. வெள்ளிக்கிழமை அல்லது சனிக்கிழமை அது ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படத் தயாராக இருந்தது. இந்த நேரத்தில்தான் சிறீதரன் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் சுமந்திரனைத் தான் கட்சியின் செயலாளராக ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிவித்திருந்தார். சுமந்திரன் பொதுச் செயலாளர் என்பதை கட்சியின் பொதுக் குழு அங்கீகரிக்கவில்லை என்ற சாரப்பட அவரது கருத்து அமைந்திருந்தது. அதனால் தானும் அவரைக் கட்சியின் செயலாளராக ஏற்கமாட்டார் என்று தெரிவித்திருந்தார்.

இந்த விவகாரம் சுமந்திரனின் காதுக்குச் சென்றதை அடுத்து, ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட இருந்த கடிதங்களை நிறுத்திவிட்டார் சுமந்திரன். கட்சிச் செயலாளராகத் தன்னை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால், பின்னர் எதற்காகத் தனது கையெழுத்துடன் ஆணைக்குழுவிற்குக் கடிதம் அனுப்பக் கோரவேண்டும் என்று கோபப்பட்ட அவர் கடிதத்தை நிறுத்திவிட்டார். இப்போது கிளிநொச்சியின் இரு சபைகளின் தவிசாளர், உபதவிசாளர்களும் பெயரிடப்படுவது இடைநடுவில் நிற்கின்றது. இனி சுமந்திரனை சபை உறுப்பினர்கள் பொதுச் செயலாளராக ஏற்கிறார்களா என்பதைத் தெரிந்துகொண்டுதான் இந்த விடயத்தில் ஏதாவது முன்னேற்றம் ஏற்படமுடியும். சிறீதரனின் ஆதரவாளர்களான கிளிநொச்சி சபை உறுப்பினர்கள் அவரை எதிர்த்துக்கொண்டு, அவருக்கு மாறான நிலைப்பாட்டை எடுத்து சுமந்திரனை கட்சியின் பொதுச்செயலாளராக ஏற்றுக்கொள்கிறார்களா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

இதற்கிடையில் நேற்று யாழ்ப்பாணம் இளம் கலைஞர் மண்டபத்தில் தமிழ் அரசுக் கட்சியின் உள்ளாட்சி சபைகளின் பிரதிநிதிகளுடன் நடந்த கூட்டத்தில் பேசிய சுமந்திரன் இந்த விடயங்களைக் குறிப்பிட்டு பெயர் குறிப்பிடாமல் சிறீதரனை ஒரு பிடி பிடித்து உதறிவிட்டார். உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கு கட்சிச் செயலாளரின் கையெழுத்துத் தேவைப்படும்போது, அதை சுமந்திரனிடம் வாங்கித் தாருங்கள் என்று தலைவரிடம் கெஞ்சிக்கொண்டு வந்து நிற்கத் தெரிகிறது, தவிசாளர்களின் பெயர்களை அறிவிக்க வேண்டுமானால் வந்து நிற்கத் தெரிகிறது, ஆனால் தொலைக்காட்சியில் மட்டும் பொதுச் செயலாளராக என்னை ஏற்கமுடியாது என்று, இது என்னடா உலக மகா நடிப்பு என்ற வகையில் பிய்த்து உதறிவிட்டார் சுமந்திரன்.

சிறீதரன் தன்னைக் கட்சியின் பொதுச் செயலாளர் என்று ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்த பின்னர் அவரது பரிந்துரைப்படியான தவிசாளர்களின் பெயர்களை கட்சியின் செயலாளராகத் தன்னால் ஆணைக்குழுவிற்கு அறிவிக்க முடியாது என்பதை கட்சித் தலைவருக்கும் அவர் தெரியப்படுத்திவிட்டார் என்பதையும் அறியமுடிந்தது. ஏற்கனவே இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தலைவர் சிவஞானத்தின் வீட்டிற்குள்ளேயே இரண்டகம் பண்ணிவைத்த சிறீதரன், இப்போது இந்தத் தலையிடியையும் உருவாக்கி விட்டுள்ளார்.

நுணலும் தன் வாயால் கெடும் என்ற மாதிரி இப்போது தான் கெட்டது மட்டுமன்றி உருப்படியாக இருந்த இரு சபைகளையும் கூடக் கெடுத்துவிட்டார் சிறீதரன். கட்சியின் செயலாளர் சபைகளின் தவிசாளர்களின் பெயர்களை ஆணைக்குழுவிற்கு அறிவிக்கவில்லை என்றால் அந்தச் சபைகள் கூடுவது தடைப்படும். மொத்தத்தில் மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறியுள்ளது. இது எங்கே கொண்டு போய் நிறுத்தும் என்று பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழினப்படுகொலை.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் இணைத் தலைவர் அருட்பணி சின்னத்துரை லியோ ஆம்ஸ்ரோங் தெரிவிக்கையில், எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக குரல் கொடுக்கவும், அநீதிக்கு நீதி வேண்டியும் மே 18ஆம் நாளில் அணி திரளுமாறு அழைத்து நிற்கின்றோம் - என்றார்.

தமிழின படுகொலையின் நாளாகிய மே 18 தினத்தில் நாம் அனைவரும் திரளாக ஒன்றுகூடி எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக குரல் கொடுக்கவும் , அந்த அநீதிக்கு நீதி வேண்டியும் படுகொலை செய்யப்பட்ட மக்களை நினைவு கூரவும் ஒன்றுகூடுமாறு மக்களை அழைத்து நிற்கின்றோம்.

அனைவரும் வருகை தந்து எமது இனத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிரான எம் குரலை உலகிற்கு உரத்துச் சொல்வோம்.

கொத்து கொத்தாக கொல்லப்பட்ட மக்களை நினைவு கூருவோம். நாம் அழிக்கப்பட்டோம் என்கின்ற அந்த விடயத்தை சர்வதேசம் வரை உரத்துச் சொல்வதற்காக இணைந்து கொள்வோம் - என்றார்.

## வன்முறையைத்.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரங்களில் பொலிஸாரின் நடவடிக்கைகள் குறித்து முன்னைய பொலிஸ்மா அதிபருக்கு எம்மால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தினை நினைவுகூருகின்றோம்.

அமைதியான முறையில் நினைவுகூரல் மற்றும் போராட்டங்களை முன்னெடுத்த நபர்கள் 2007ஆம் ஆண்டு 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சமவாயச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் கைதுசெய்யப்பட்ட நிலையில், அச்சட்டத்தின் தவறான பிரயோகம் குறித்து எமதுகண்டனத்தை வெளிப்படுத்தியிருந்தோம்.

இந்நிலையில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தெரிவுசெய்யப்பட்ட புதிய ஆளும்தரப்பு அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் நினைவுகூரல் நிகழ்வுகளில் தலையிடமாட்டோம் என பொது அறிவிப்பொன்றை வெளியிட்டது. அந்த அறிவிப்புக்குப் பின்னரும்கூட, குறித்த சில நினைவுகூரல் நிகழ்வுகளைத் தடுப்பதற்கான நீதிமன்ற உத்தரவைப்பெற பொலிஸார் முயற்சித்துள்ளனர்.

வன்முறை, பகைமை அல்லது ஒடுக்குமுறைகளைத் தூண்டக்கூடிய இன, மத வெறுப்பு சார்ந்த நடவடிக்கைகளைத் தடைசெய்யும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது நடைமுறையில் தவறாகப் பயன்படுத்தப்படுவது வழக்கமாகிவிட்டது.

இந்தப் பிரிவு முறையாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதை அவதானித்ததன் காரணமாக, கடந்த 2019 ஆம் ஆண்டு இச்சட்டத்தின் சரியான பிரயோகம் தொடர்பான வழிகாட்டல்களை நாம் வெளியிட்டோம்.

அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் நினைவுகூரல் நிகழ்வுகள் மற்றும் உணவுப் பொருட்களை வழங்கும் நடவடிக்கைகளை பகைமை அல்லது வன்முறைக்குத் தூண்டும் நடவடிக்கைகளாகக் கருதமுடியாது எனவும், இவை நாட்டின் அரசமைப்பின் 14 (1)(அ) பிரிவின்கீழ் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்துக்கு உட்பட்டவையாகும் எனவும் எமது ஆணைக்குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினைப் பிரயோகிப்பது பொருத்தமற்றது என்பதுடன் அதன் பிரயோகம் தனிநபர்கள் துன்புறுத்தப்படுவதற்கும், அவர்களது கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் மீறப்படுவதற்கும் வழிகோலும்.

மேலும் நினைவுகூரல் நடவடிக்கைகள் 'இழப்புக்கான எதிரீட்டின்' ஓரங்கமாகும். ஆகவே பாதிக்கப்பட்ட சமூகங்களின் உரிமைகளை மதித்தல், பாதுகாத்தல் என்பன இலங்கை அரசின் கடமையாகும். அதேபோன்று 2017 ஆம் ஆண்டு எமது ஆணைக்குழுவினால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட பரிந்துரைகளின் பிரகாரம் எந்த சமூகத்தை அல்லது அரசியல் நம்பிக்கையை சேர்ந்தவர்களாக இருப்பினும், அவர்கள் தமது அன்புக்குரியவர்களை இழந்த துயரைப் பகிர்ந்துகொள்வதற்கும், அவர்களை நினைவுகூருவதற்குமான வாய்ப்பைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர்.

அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் நினைவுகூரல் நிகழ்வுகள் தமிழர்கள் மத்தியில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வழங்கப்படவேண்டிய இழப்பீட்டுக்கான எதிரீட்டின் ஓரங்கமாக சட்டத்தின் ஊடாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதனால், இதுகுறித்து பொலிஸின் அனைத்துப் பிரிவுகளுக்கும் மும்மொழிகளிலும் தெளிவான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

அத்தோடு இன, மத வெறுப்பை ஊக்குவிக்காத மற்றும் பகைமை அல்லது வன்முறைக்குத் தூண்டுதலாக அமையாத நடவடிக்கைகளுக்கு மதிப்பளிக்கவும், பாதுகாக்கவும் வேண்டும் என சகல பொலிஸாருக்கும் அறிவுறுத்தவேண்டும்.

அத்தோடு இவற்றின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நிர்வாகப்பிரிவுகளில் உள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் நினைவுகூரல் நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான நீதிமன்ற உத்தரவுகளைப்பெறுவதைத் தவிர்க்கவேண்டும் என அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## மின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டின் நான்காம் காலாண்டிலிருந்து தொடர்ச்சியாக ஐந்து காலாண்டுகளுக்கு இலாபம் ஈட்டிய பின்னர், மின்சாரசபை பதிவு செய்த முதல் இழப்பாக இது பதிவாகியுள்ளது.

வருமானத்தில் கூர்மையான சரிவை மின்சாரசபையின் அறிக்கை காட்டுகிறது. வருமானம் கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 44 சதவீதத்தால் குறைந்துள்ளது. 2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 167 பில்லியனில் இருந்து 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 93.9 பில்லியன் ரூபாவாக வருமானம் குறைவடைந்துள்ளது.

2024 டிசம்பர் 27 முதல் இவ்வாண்டு ஜனவரி 10 வரை நடைபெற்ற பொது ஆலோசனைகளுக்குப்பிறகு, இலங்கைபொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு எடுத்த முடிவைத் தொடர்ந்து, ஜனவரி 17 மின்சாரக் கட்டணக் குறைப்பு அமல்படுத்தப்பட்டது. 2025ஆம் ஆண்டின் முதல் ஆறுமாதங்களுக்கு 20 சதவீத கட்டணக்குறைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது.

எவ்வாறிருப்பினும் தற்போது நிதி அபாயங்களைக் குறைக்க செலவு-மீட்பு மின்சாரக் கட்டணங்களை ஏற்றுக்கொள்ளுமாறு இலங்கையை சர்வதேச நாணய நிதியம் சமீபத்தில் பரிந்துரைத்தது. இந்நிலையிலேயே மின்சாரசபை அதன் நஷ்டம் குறித்தும் அறிவித்துள்ளது. அடுத்த மின்சாரக் கட்டணத் திருத்தம் ஜூனில் திட்டமிடப்பட்டுள்ளது. வலுசக்தி நிபுணர்கள் சுமார் 15 சதவீத அதிகரிப்பை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளது.

## ஐக்கிய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தி ஒற்றுமையுடன் முன்னோக்கி பயணிக்க வேண்டியுள்ளது. ஒற்றுமையை பாதுகாக்க வேண்டியுள்ளது. அதேவேளை ஐக்கிய மக்கள் சக்தி மறுசீரமைக்கப்படவேண்டும். மக்கள் எதிர்பார்க்கும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தயாராக வேண்டும்.

அடுத்து ஆட்சியைக் கைப்பற்றக்கூடியவாறு கட்சியின் உள்ளக கட்டமைப்புக்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய, ஊழல் மோசடிகளற்ற சிறந்த தலைமைத்துவம் கட்சிக்குள் உருவாக்கியுள்ளது. ஹர்ஷ டி சில்வா, கபீர் ஹசீம், எரான், முஜிபுர், மரிக்கார், நளின் பண்டார போன்றவர்கள் தூய்மையான அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாட்டை கட்டியெழுப்பக் கூடிய உண்மையான திறமையும், பலமும் கொண்டவர்கள். இவர்கள் மேலும் உயரக் கூடியவர்கள். எனவே அவர்களுக்கான இடத்தை வழங்க வேண்டியது கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் கடமையாகும். ஐக்கிய தேசிய கட்சியின் பலவீனமான தலைமைத்துவத்தால் தான் இன்று நாடும் இந்த நிலையை அடைந்துள்ளது.

நாம் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து தோன்றியவர்கள். எனவே இனியும் ஐக்கிய தேசிய கட்சி அல்லது ஐக்கிய மக்கள் சக்தி ஓரிருவருக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டவையாக இருக்கக் கூடாது. எனவே பலம்மிக்க சிறந்த இளம் தலைமைத்துவம் இனிவரும் அரசியலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு தேவையாகவுள்ளது.

இனிவரும் காலங்களில் கட்சிக்கும் நாட்டுக்கும் தேவையான சிறந்த இளம் தலைமைத்துவத்தை முன்னிறுத்தவேண்டும். ஐக்கிய மக்கள் சக்திக்குள் அந்த மாற்றம் நிச்சயம் ஏற்படுத்தப்பட வேண்டும். நாட்டு நலனுக்கு இந்த மாற்றம் அத்தியாவசியமானது என்றார்.

## தேசிய போர்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

30 ஆண்டு கால உள்நாட்டு போரை நிறைவு செய்வதற்காக 27 000 படையினர் தமது உயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். மேலும் ஆயிரக்கணக்கான வீரர்கள் அங்கவீனமடைந்துள்ளனர். அவர்கள் அனைவரையும் கௌரவிக்கும் வகையிலான நிகழ்வுகள் நாடு முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

16ஆவது தேசிய போர்வீரர் நினைவு நாள் திங்கட்கிழமை கோட்டை ஸ்ரீ ஜெயவர்தனபுரவில் உள்ள தேசிய போர்வீரர் நினைவுதூபியில் நடைபெறவுள்ளது. பிரதான நிகழ்வு மாலை 4 மணி முதல் 6 மணி வரை நடைபெறவுள்ளது . ஜனாதிபதியின் பிரதிநிதியாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகர (ஓய்வு) முன்னிலையில் நிகழ்வுகள் நடைபெறும்.

போர் வீரர் நினைவு தினத்தை முன்னிட்டு முப்படைகள், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புத் துறையினரால் நாடு தழுவிய சமூக நலத் திட்டங்களும் மேற்கொள்ளப்படும். பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, அட்மிரல் ஒப் த ஃப்ளீட் வசந்த கரன்னாகொட மற்றும் மார்ஷல் ஒப் த எயார்போர்ஸ் ரொஷான் குணதிலக ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொள்ள உள்ளனர்.

தேசத்தின் பாதுகாப்பிற்காக தங்கள் உயிரை தியாகம் செய்த முப்படைகளின் துணிச்சல்மிக்க படையினருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், இந்த வருடாந்த நினைவு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. உயிரிழந்த ஆயுதப்படையினரின் நினைவைப் பாதுகாப்பதில் அமைச்சு மற்றும் முப்படைகளின் உறுதியான அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

அவர்களின் தேசபக்தி, தியாகம் மற்றும் கடமைக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஆகியவை எதிர்கால சந்ததியினரை தொடர்ந்து ஊக்குவிக்கும். இறையாண்மை மற்றும் தேசிய பாதுகாப்பில் தன்னலமின்றி

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

# இறுதிப் போரில் உயிரிழந்தவர்களுக்கு வட்டக்கச்சியில் நினைவேந்தல் நிகழ்வு

இறுதிப் போரில் உயிரிழந்தவர்களின் நினைவேந்தலும் முள்ளிவாய்க்கால்கஞ்சி வழங்கலும் தமிழரசுக்கட்சியின் இராமநாதபுரம் வட்டாரத்தின் ஏற்பாட்டில்வட்டக்கச்சி பொதுச்சந்தை முன்பாகவும் வட்டக்கச்சி வட்டாரத்தின் ஏற்பாட்டில் ஆறுமுகம் வீதி சந்தியிலும் இடம்பெற்றது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கலந்து கொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் உரையாற்றிருந்தார். அவர் தளதுரையில் -

நாங்கள் ஈழத்தமிழ் தேசிய இனம். இந்த மண்ணிலே நீண்டகாலம் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டோம். 1954முதல் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தமிழர் மீதான பல்வேறு படுகொலைகள் இடம்பெற்றன.

நாட்டின் பல பகுதிகளில் இனப்படுகொலை மேற்கொள்ளப்பட்ட போது எல்லாம் தர்மத்தின் வழி நாங்கள் ஒரு தீர்வை எட்டிக்கொள்ளலாம் என எமது தலைவர்கள் கருதிய காலத்தில் எங்களைப் பாதுகாக்க ஆயுதங்களுக்கு பதில் வேறொண்றும் இல்லை என்ற நிலையிலே ஆயுதங்களை ஏந்தினோம். பல்வேறு விடுதலை இயக்கங்கள் ஆயுதங்கள் ஏந்தினாலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் கொள்கையே நீண்ட விடுதலைப்போராட்டத்தை கொண்டது. இந்த காலத்தில் பல படுகொலைகள் இடம்பெற்று.

முள்ளிவாய்க்காலில் நிறைவுக்கு வந்தது. பல நூற்றுக்கணக்கான மக்கள் படுகொலை



செய்யப்பட்டன. பல லட்சம் மக்கள் இருந்த போது 70000 மக்கள் தான் உள்ளார்கள் எனத் தெரிவித்து உணவளித்து. ஏனையோரை பட்டினியால் கொண்டனர். அதனை விட கொத்தணி குண்டுகளால் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவை நடந்து 16 வருடம் ஆகியிருந்தாலும் சிரட்டையில் கஞ்சி என்பது உணவுக்காக மக்கள் கஷ்டப்பட்ட காலத்தில் பெரிதும் உதவியது. அந்த கஞ்சி குடித்த சிறுவர்களையே கொன்றது. இலங்கை அரசு சிரட்டை கஞ்சி என்பது எங்களோடு வாழ்ந்தவர்களின் ஆத்மாவாக நினைக்கிறோம். - என்றார். 316



# முன்னணி இன்றியே வவுனியாவில் ஆட்சியமைப்பதில் முயற்சி தீவிரம்

## வீடு மற்றும் சங்கு கூட்டணி மீது குற்றச்சாட்டு

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பாக தமிழ் தேசிய கட்சிகளுக்குள் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ள போதும் வவுனியாவில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியை புறந்தள்ளி நகர்வுகள் இடம்பெறறு வருகின்றன.

வவுனியாவடக்கில்தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைக்க தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆதரவு வழங்குவதாக ஏற்கனவே அறிவித்துள்ளதுடன், அங்கு தமிழரசுக் கட்சி 5 ஆசனங்களையும், தமிழ் தேசிய மக்கள் முன்னணி 4 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி 3 ஆசனங்களையும் கொண்டுள்ளன. ஏனைய சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைப்பதை தடுக்கும் வகையில் தமிழ் தேசிய கட்சிகளுக்கு ஆதரவு வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

எனினும், மாவட்டத்தில் ஆட்சி அமைப்பது தொாபாக ஏனைய கட்சிகளுடன் தமிழ் அரசுக் கட்சி மற்றும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி வவுனியா மாவட்ட மட்டத்தில் பேசி வருகின்ற போதும் தமிழ் தேசிய மக்கள் முன்னனியுடன் மாவட்ட மட்டத்தில் எந்தவொரு பேச்சுக்களும் இடம்பெறவில்லை. வவுனியா மாநகர சபையில் கூட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவு அவசியமாகவுள்ள நிலையில் அது தொடர்பில் மாவட்ட மட்டத்தில் எந்தவொரு பேச்சுக்களும் இடம்பெறவில்லை.

மாறாக ஏனைய கட்சிகளை அழைத்து மாவட்ட மட்ட கூட்டங்களை தமிழரசுக் கட்சி மற்றும் சங்கு கூட்டணி பேசி

# தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் நினைவேந்தலும்

(ஹஸ்பர்).

திருகோணமலை தம்பலகமம் நாயன்மார் திடல் கிண்ணியா தம்பலகாமம் பிரதான வீதியில் முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி நேற்று (சனிக்கிழமை) மாலை வழங்கி வைக்கப்பட்டது.

இதனை தமிழ் தேசிய மக்கள் முண்ணனியின் தம்பலகாமம் பிரதேச இணைப்பாளர்கள் இணைந்து முன்னெடுத்தனர். இதில் குறித்த கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் கலந்து கொண்டார்.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தினை முன்னிட்டு, கடந்த யுத்தத்தில் உயிரிழந்த மக்களை நினைவுகூரும் நிகழ்வுகள் நீடித்த வலியையும், அரசால் மறுக்கப்படும் நீதிக்கான மக்களின் போராட்டத்தையும் வெளிப்படுத்தும் முக்கியமான வலையொலியாக மாறியுள்ளன.

இதன்போதுஇறுதியுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து ஒரு நிமிட மௌன அஞ்சலியும் இடம் பெற்றது.

இந்நிகழ்வில்,, கிராமப்புற மக்களும், சமூகச் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டு தங்கள் துயர அனுபவங்களைப் பகிர்ந்ததோடு, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வாழ்வுகளைப் பற்றி பேசினர். நிகழ்வு, சமூக நினைவாற்றலை பாதுகாத்து, இனநீக்கம், உயிரிழப்பு மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிரான மக்களின் எதிர்வினையாகவும் அமைந்தது.

இதில் கட்சியின் புதிய உள்ளூராட்சி பிரதேச சபை வேட்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







# சூறாவளி காற்றால் முறிந்த மரங்கள் வவுனியாவில் இயல்பு வாழ்வு பாதிப்பு

வவுனியாவில் நேற்று வீசிய சூறாவளிக்காற்றால் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.



வவுனியாவில் நேற்று (சனிக்கிழமை) காலை ஏழு மணியளவில் கடும் மினி சூறாவளிக் காற்று வீசியதுடன், மழையும் பொழிந்தது. இதனால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதுடன், மின்தடையும் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாகவவுனியா நகரப் பகுதியில் இருந்த நடைபாதை விற்பனைநிலையங்கள் காற்றில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

நகரம் உட்பட பல்வேறு பகுதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.குறிப்பாக மின் வடங்களுக்கு மேல் மரங்கள் வீழ்ந்தமையால் சில பகுதிகளில் மின்சார தடங்கல் ஏற்பட்டது.

தாழ் நிலப் பகுதிகளில் வெள்ளநீர் தேங்கியுள்ளதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. 100

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முள்ளிவாய்க்கால் நினைவுகள் மறக்க முடியாத, மறந்துவிடக் கூடாத வரலாறு,

**தமிழர் வரலாற்றில் இன்று (மே 18) ஒரு மறக்கமுடியாத நாளாகும். இது தமிழ் இன அழிப்பின் நினைவுநாளாக உலகத்தமிழர்களால் ஆண்டுதோறும் நினைவுகூரப்படும் நாள். 2009 ஆம் ஆண்டு மே 18ஆம் நாள், இலங்கையின் வடக்குப் பகுதியான முள்ளிவாய்க்காலில் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்ட இறுதிப் போரில், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்தனர். அப்போரின் பயங்கரத்தையும் அதன் பின்னணியிலான அரசியல் சூழ்நிலைகளையும் நாம் மறந்துவிடமுடியாது.**

**இன்றைய நாள் முள்ளிவாய்க்காலில் மட்டுமன்றி, உலகின் பல இடங்களிலும் தமிழர்கள் தங்களது துயரங்களை வெளிப்படுத்தும் நாளாகவும், நீதிக்காகவும் உணர்வுகளுடனும் குரல் கொடுக்கும் நாளாகவும் விளங்குகின்றது. முள்ளிவாய்க்காலில் இன்று நடைபெறும் நினைவேந்தல் நிகழ்வு, உயிர் நீத்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் சாகசமாக மட்டுமல்ல; இது நீதியற்ற நிலையை சுட்டிக்காட்டும் அரசியல் அறிக்கையாகவும் காணப்படுகின்றது.**

**முள்ளிவாய்க்கால் என்பது இன்று ஒரு வெறும் நிலமல்ல. ஒரு காயத்தின் வடு. இன அழிபின் அடையாளப் புள்ளி. இதற்கு நீதியால் மட்டுமே நிவாரணம் வழங்க முடியும். சுமார் 146,000 பேருக்கு அரச ஆவணங்களின்படி என்ன நடந்தது என்பது தெரியாமலேயே போய்விட்ட இந்த இறுதிப் போரில் நிகழ்ந்தவற்றுக்காக கடந்த 15 ஆண்டுகளாகத் தமிழர்கள் நீதி கேட்டு வருகிறார்கள். இன்று முதல் 16ஆவது ஆண்டில் நீதிக்காகக் காத்திருக்கப் போகிறார்கள்.**

**மன்னிப்பு அல்லது மறதி – இவை இரண்டும் இந்த நழுவிய வரலாற்றுக்கு உரிய பதில்கள் அல்ல. உண்மைகளை அங்கீகரித்தல், சம்பவங்களுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வது, நீதிபூர்வமான விசாரணைகள் மற்றும் அதற்கேற்ப நடவடிக்கைகள் – இவை தான் மறக்கவே முடியாத வலிகளுக்கு உரிய மரியாதையாக இருக்கும்.**

**இன்று நினைவுகூரும் இந்த நாள், துயரத்தின் நினைவாக மட்டுமல்ல; எப்போது ஒருவரின் உரிமைகள் சிதைக்கப்படுகின்றனவோ, அதற்கெதிராக உறுதியுடன் நிற்கவேண்டும் என்பதற்கான அழைப்பாகவும் இருக்கிறது. நாம் நினைவுகூரும் உயிர்கள் ஒவ்வொன்றும், இனவழிப்பு என்ற சோகத்தின் எதிரொலியாக இன்று வாழ்கின்றன.**

**முள்ளிவாய்க்கால் அழிவுக்கு நீதி கிடைக்காத வரை, இன சமாதானம் என்பது வெறும் வார்த்தையாகவே இருக்கப் போகின்றது. தமிழர் நீதி தேடல் இந்த நினைவேந்தலின் உள்ளார்ந்த அர்த்தம். நினைவுகள் நிறைந்த இன்று, நாம் உறுதியாகக் கூற வேண்டியது: இன அழிப்பைக் குறித்த உண்மையைப் பறைசாற்றுவோம், நீதி கிடைக்கும் நாள் வரை இந்த நினைவுகளை சுமந்து போராடுவோம்.**

# அம்பாறை மாவட்டத்தின் பல இடங்களில் கடும் காற்று போக்குவரத்து மேற்கொள்வதில் பிரதேச மக்கள் சிரமம்

(பாறுக் ஷிஹான்)

கடும் காற்று காரணமாக அம்பாறை மாவட்டத்தில் நேற்று(சனிக்கிழமை) மரங்கள் முறிந்து விழுந்ததுடன் மக்கள் குடியிருப்புக்கள் வியாபார நிலையங்கள் என பலதும் சேதமடைந்துள்ளதோடு மக்களின் இயல்புவாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது.

மேலும் கல்முனை, நற்பிட்டிமுனை, மருதமுனை ,பெரிய நீலாவணை, சாய்ந்தமருது, காரைதீவு ,சம்மாந்துறை ,நிந்தவூர்,அட்டாளைச்சேனை,அக்கரைப்பற்று , உள்ளிட்ட பகுதிகளில் கடும் காற்றும் மழையும் திடிரென காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற வானிலை எதிர்வுகூறல்களை கவனத்திற் கொண்டு செயற்படுமாறும் பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் நடந்து கொள்ளுமாறும் தற்போதைய காலநிலை மாற்றமானது சிறுவர் முதல் பெரியோர் வரை பாதிப்புகளை ஏற்படுத்துவதாகவும் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவி பணிப்பாளர் எம்.றியாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போதைய காலநிலை மாற்றம் குறித்து எமது செய்தியாளர் பாறுக் ஷிஹானிற்கு தெரிவிக்கையில் -

அம்பாறை மாவட்டத்தில் அடிக்கடி திடீரென பலத்த காற்று மழை ஏற்பட காலநிலை மாற்றமே காரணமாகும். எல்-நினோவின் தாக்கம் இலங்கைக்கு தற்போது ஏற்பட்டிருக்கின்றது. இதன் தாக்கம் காரணமாக இடையிடையே மழை ஏற்படுவதுடன் பாரிய காற்றும் 10 முதல் 20 நிமிடம் வரை நீடிக்கிறது. இது தவிர அதிக வெப்பம் நிலவுவதுடன் வழமையை விட இன்று மாத்திரம் பாரிய காற்று வீசியதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

குறிப்பிட்ட ஒரு நேர காலத்திற்குள் இவ்வாறான பாரிய காற்று இடையிடையே மழை வீழ்ச்சி என்பன இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. எனவே தற்போது பாரிய காற்று வீசுவதால் வீடுகளில் உள்ளவர்கள் கடை வைத்திருப்பவர்கள் முன்னேற்பாடான நடவடிக்கையில் ஈடுபடுமாறும் தற்போது வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக வயல்வெளிகளில் வேலைசெய்வதைதவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் வெப்பநிலை அதிகரிப்பால் சிறுவர்கள் நீராகாரங்களை உட்கொள் கொள்ளுமாறும் வெளியே அநாவசியமாக நடமாடுவதை தவிர்க்குமாறும் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் வயல்வெளிகளில் நீண்ட நேரம் வயல்வேலைகளில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.



# கல்முனை பிராந்தியப் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனையில் 82 பேருக்கு சட்ட நடவடிக்கை

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் கல்முனை பிராந்தியத்தில விசேட போக்குவரத்து பொலிஸாரின் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நேற்று மாலை இந்த திடீர் சோதனை நடவடிக்கையானது கல்முனை புற நகரப்பகுதி முதல் சாய்ந்தமருது புறநகர் கடற்கரை வீதி போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்டது.

இத் திடீர் சோதனையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்துவது, தலைக்கவசம் அணியாது செல்வது, ஒரு மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேற்பட்டவர்கள் பயணிப்பது, அதிவேகமாக செல்வது, மிக ஒலி எழுப்பிய மோட்டார்





சைக்கிள்கள் தொடர்பில் கண்காணிக்கப்பட்டு தண்டப்பணம் விதிக்கப்பட்டு வீதி ஒழுங்குமுறை தொடர்பான ஆலோசனைகள் பொலிஸாரால் வழங்கப்பட்டன.

இச்சோதனை நடவடிக்கை அம்பாரை மாவட்ட கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸார் வழிகாட்டலில் இடம்பெற்றது.இதன் போது கல்முனை சம்மாந்துறை சவளைக்கடை சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொலிஸார் இணைந்து முக்கிய சந்திகள் பிரதான புற நகர வீதிகளில் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொண்டனர்.

குறிப்பாக இச்சோதனை நடவடிக்கையின் போது 82 பேர் மேற்கூறிய குற்றங்களுக்காக தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வருடாந்தப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாக தெரிவும்

(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 24 ஆவது வருடாந்த பொதுக் கூட்டமும், 2025 - 2026 ஆம் வருடத்திற்கான புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யும் கூட்டம் அதன் தலைவர் ஏ.எல்.எம் யாஸீன் (ஜே.பி) தலைமையில் நேற்;று (சனிக்கிழமை) சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மத் ஹனீபா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 2025ஃ2024 ஆண்டுக்கான புதிய தலைவராக ஓய்வு பெற்ற மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரி ஏ.உதுமாலெப்பை தெரிவு செய்யப்பட்டதுடன் செயலாளராக ஓய்வு பெற்ற நிர்வாக கிராம உத்தியோகத்தர் ஏ.எம் இல்யாஸ் அவர்களும்,பொருளாளராக ஏ.எம்.ஏ காதர் அவர்களும், உப தலைவராக எம்.எம் சலீம்,உப செயலாளராக ஏ.புவனேந்திரனும் தெரிவு செய்யப்பட்டதுடன் நிர்வாக உறுப்பினர்களாக எம்.அலியார்,ஏ.எம் ஹுசைன், ஐ.எம். இப்றாஹீம் ஏ.எம் முஹம்மட் பரிட் ஆகியோர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இந் நிகழ்வில் பிரதேச செயலாளர் கருத்து தெரிவிக்கையில் -

அரசாங்கத்தால் தற்போது நடைமுறைப்படுத் தப்படும் கிளீன் ஸ்ரீலங்கா தேசிய வேலைத்திட்டம் அதேபோல அபிவிருத்தி சார்ந்த வேலைத்திட்டங்கள் ,வாழ்வாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்களின் உங்கள் ஒவ்வொருவரின் அனுபவசார் பங்களிப்புகளையும், ஒத்துழைப்புகளையும் வழங்க வேண்டும். என்பதோடு தற்போது கிராம மட்டத்தில் நடைபெற்றுவரும் கிராமிய அபிவிருத்தி திட்டம் தயாரிப்பதிலும் தங்களின் கருத்துக்களும், ஆழமான சிந்தனைகளும் பழைய அனுபங்களையும், முழுமையான ஒத்துழைப்புகளையும் வழங்க வேண்டும்.அவ்வாறு நீங்கள் ஒத்துழைப்புகள் வழங்கும் போது இச் செயற்திட்டங்கள் வலுவானதாகவும் சிறப்பானதாகவும் காணப்படும். எனவும் குறிப்பிட்டார்.



மேலும் ஓய்வூதிய சமூகத்தை கட்டுக்கோப்பாக வைத்து அவர்களின் நலன்களில் அக்கறை செலுத்துவதோடு, ஓய்வூதியம் பெற்றவர்களில் நல்ல வளவாளர்கள், துறைசார் வல்லுனர்கள் என பலதரப்பட்டவர்கள் உள்ளனர். அவர்களையும் ஒருங்கிணைத்து இவ் ஓய்வூதிய நிதியம் திறன்பட செயற்பட வேண்டும். என்பதோடு சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் இதுவரை அரசாங்கத்தால் ஓய்வூதியம் பெறுகின்றவர்களில் சிவில் ஓய்வூதியம் 708 பேரும், விதவை ஓய்வூதியம் 301 பேரும் மொத்துமாக 1009 பேர் ஓய்வூதியம் பெறுகின்றனர் எனவும் குறிப்பிட்டு இருந்தார்.

இந் நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலக கணக்காளர் எஸ்.எல் சர்தார் மிர்ஸா, ஓய்வூதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஐ.எல் பிரோஸா கே.எல் பயீஸா ஆகியோரும் கலந்து கொண்டனர்.







காலைக்கதிர்
Kalaikkathir

# மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தி திட்டம் தயாரிப்பது சம்பந்தமான ஆரம்ப நிகழ்வுகள்

(சர்ஜூன் லாபீர்)

தேசிய ரீதியாக நடைமுறைப்படுத்தப்படும் ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் கிராம மக்களின் பங்கேற்புடன் கிராமிய அபிவிருத்தி திட்டம் தயாரித்தல் தொடர்பான ஆரம்ப நிகழ்வு நேற்று (சனிக்கிழமை) தமிழ் பிரிவு-01 கிராம சேவகர் பிரிவில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.டபிள்யூ சித்தி நதீரா தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கிராம மக்களை நேரடியாக பங்கேற்பு செய்து அம்மக்களின் கிராம மட்ட பிரச்சினைகள் சம்பந்தமாகவும் அதற்கான தீர்வு திட்டங்களும், முன்மொழிவுகளும் இச் செயற்திட்டத்தின் ஊடாக நேரடியாக கேட்டறிந்து கொள்ளப்பட்டதுடன், கிராமிய அபிவிருத்தி திட்டம் தயாரிப்பதற்குரிய மக்கள் பங்களிப்பு சார்பான உபாயங்களும் பயன்படுத்தப்பட்டது.

மேலும் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் உள்ள 51 கிராம சேவகர் பிரிவுகளிலும்



இச்செயற்திட்டம் இன்றிலிருந்து கிராம மட்ட உத்தியோகத்தர்களின் முழுமையான பங்களிப்புடன் நடைமுறைப்படுத்துப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.



இந் நிகழ்வில் கிராம சேகவர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# 5 பல்சர் மோட்டர் சைக்கிள்களை திருடிய நபர் வவுனியாவில் கைது

பல்வேறு பகுதிகளில் 5 பல்சர் மோட்டர் சைக்கிள்களை திருடிய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் நேற்று (சனிக்கிழமை) தெரிவித்தனர்.

இம் மாதம் வவுனியா, ஈரப்பெரியகுளம், மதவாச்சி, வவுனியா - முதலாம் குறுக்குத் தெரு, மதவாச்சி - அட்டவீரக் கொட, செட்டிகுளம் ஆகிய பகுதிகளில் பல்சர் ரக மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.

குறித்த திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி சிரேஸ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயத்திலக தலைமையிலான பொலிஸ் குழு தீவிர விசாரணைகளை முன்னெடுத்திருந்தது. இதன்போது சிதம்பரபுர வீதி, ஈரப்பெரியகுளம் பகுதியில் வசிக்கும் 27 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த 5 பல்சர் மோட்டர் சைக்கிள்களும் முறையே 550,000, 299,500, 500,000, 300,000, 970,000 ஆகிய விலைகளில் விற்பனை செய்யப்பட்டிருந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து குறித்த 5 பல்சர் மோட்டர் சைக்கிள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்ட இளைஞரை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். 100




# சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் வித்தியாலயம் கோட்ட மட்ட விளையாட்டில் சாதனை

## மாணவர்கள் மத்தியில் பொ. ஐங்கரநேசன் எடுத்துரைப்பு

(நூருல் ஹுதா உமர்)

2025 ஆம் ஆண்டுக்கான சாய்ந்தமருது கோட்டமட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் கடந்த வாரம் கல்முனை சாஹிரா கல்லூரி மைதானத்தில் சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி அஸ்மா அப்துல் மலீக் தலைமையில் நடைபெற்றது.

இந்த போட்டிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றிய சாய்ந்தமருது கல்முனை லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலய மாணவர்கள் 16 முதலாமிடங்கள், 14 இரண்டாமிடங்கள்,18 மூன்றாம் இடங்கள் அடங்கலாக மொத்தமாக 48 வெற்றியிடங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன் அவர்களின் ஆலோசனை வழிகாட்டலின் கீழ் இணைப்பாடவிதான பொறுப்பதிபர் எம்.எப்.எம்.ஆர். ஹாத்தீம் அவர்களின் தலைமையில் பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் எம்.எப்.எம். றிபாஸ், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் என்.எம்.ஏ. ஆபாக் ஆகியோர்களின் அயராத பெரு முயற்சியினால் மாணவர்கள் இவ் வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

வெற்றிபெற்ற வீரர்களுக்கும் மற்றும் பயிற்றுவித்த ஆசான்களுக்கும் பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர், ஏனைய ஆசிரியர்கள் கல்விசாரா உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினர் தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

மேற்படி போட்டிகளில் 1ஆம், 2ஆம் இடங்களைப் பெற்றவர்கள் எதிர்வரும் வாரங்களில் நடைபெறவுள்ள வலயமட்ட போட்டிகளில் பங்குபற்ற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் சந்தை

(சியாஜ்)

கற்பிட்டி மஸ்ஜிதுர் றஹ்மான் பாலர் பாடசாலையின் வருடாந்த சிறுவர் சந்தை நிகழ்வு வெள்ளிக்கிழமை அதன் தலைவர் எம்.ஏ.எம் இக்மால் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் அதிதிகளாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் கற்பிட்டி பிரதேச சபை போனஸ் உறுப்பினர எஸ்.எச் முஸம்மில், மஸ்ஜிதுர் றஹ்மான் உப தலைவர் எச்.ஏ.எம் பர்ஷான், பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி எம்.டி.எம் பரீத்கான் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேற்படி நிகழ்வு பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் பாலர் பாடசாலை ஆசிரியர்களான எம்.ஐ.எப் சஹானா மற்றும் எம்.எஸ் சஜானஸ் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் சிறார்களின் இணைபாடவிதான செயற்பாடுகளை நோக்காக கொண்டு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.





# திருக்கோவில் நாவிதன்வெளி சுயேச்சை வண்டில்கள் சந்திப்பு

## தமிழரசின் பதிலையடுத்து மாகாணசபை பற்றி தீர்மானிக்கப்படும்



(சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச சபையில் ஆட்சியமைக்கும் வண்டில் சின்ன சுயேச்சைக் குழுவும் நாவிதன்வெளியில் இரண்டு ஆசனங்களை பெற்ற வண்டில் சின்ன சுயேச்சை குழுவும் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டன. இச் சந்திப்பு திருக்கோவிலிலுள்ள சுயேச்சை குழு தலைவர் சுந்தரலிங்கம் சசிகுமாரின் இல்லத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

அங்கே எதிர்கால அரசியல் செயற்பாடுகள் மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் தொழில் துறைகள் எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் போட்டியிடுதல் என்பன தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

கிழக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் முதலில் இலங்கை தமிழரசு கட்சியுடன் பேசுவதற்கு தயார் நிலையில் இருக்கின்றோம் என்பதில் இணக்கம் காணப்பட்டது.

அவர்களுடனான சந்திப்பின் பலாபலனைப் பொறுத்து கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எவ்வாறு நடந்து கொள்வது என்பது பற்றி விரிவாக கலந்துரையாடப்படும்.

தமிழரசுக்கட்சித்தலைமைப் பீடம் தமது சுயேச்சை அணியோடு

எவ்வாறு நடந்து கொள்வது என்பது குறித்து எதிர்கால திட்டங்கள் அமையும் என்று தலைவர் சு. சசிகுமார் தெரிவித்தார்.

# கல்விக் கருத்தரங்கு

(ஸாகிர்)

இஸ்லாத்தில் சகவாழ்வு, மத நல்லிணக்கம், பொறுப்புணர்வு மற்றும் நடுநிலைமை பேணல் என்ற அடிப்படைகளை மையமாகக் கொண்ட கல்விக் கருத்தரங்கின் இறுதிநாள் நிகழ்வுகள் வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்றன.

சவூதி அரேபியாவின் இஸ்லாமிய விவகார மற்றும் வழிகாட்டல் அமைச்சின் அனுசரணையுடன் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து கொழும்பிலுள்ள சவூதி அரேபிய தூதுவராலயத்தின் மேற்பார்வையில் இடம்பெற்ற இந்தக் கல்விக் கருத்தரங்குகளின் இறுதி நாள் நிகழ்வில் சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல்-கஹ்தானி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இக்கல்விக் கருத்தரங்கின் அங்குரார்ப்பண அமர்வு புதன்கிழமை விளையாட்டுத் துறை அமைச்சின் கேட்போர் கூடத்திலும் இறுதி நாள் நிகழ்வு சனிக்கிழமை கொழும்பு டவர் மண்டபத்திலும் இடம்பெற்றன.

அங்குரார்ப்பண அமர்வில் சவூதி அரேபியாவின் கலாசார அமைச்சின் ரியாத் பிரிவிற்குப் பொறுப்பாகவுள்ள முஹம்மத் பின் சுலைமான் அல் புரைஹ் சிறப்புரையாற்றியதோடு, இறுதிநாள் நிகழ்வில் முஹம்மட் பின்த் ஹசன் அல்-செஹ்ரி சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்வுகளில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் உட்பட திணைக்களத்தின் உயரதிகாரிகள், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பிரதிநிதிகள், கொழும்பு மாவட்ட பள்ளிவாசல் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் மற்றும் கொழும்பு வட பிராந்திய அரபுக் கல்லூரி பிரதிநிதிகள் உள்ளிட்ட 2000 இற்கு மேற்பட்ட

உலமாக்கள், புத்திஜீவிகள், அரச உயர் அதிகாரிகள் அரபுக் கல்லூரி விரிவுரையாளர்கள் மற்றும் உஸ்தாத்மார்கள், உயர் தர மாணவர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் எனப் பலரும் நிகழ்வில் பங்குபற்றி இதன்மூலம் நன்மையடைந்தனர்.

விளையாட்டுத் துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் புதன்கிழமை இரண்டு அமர்வுகளும் வியாழக்கிழமை டவர் மண்டபத்தில் மேலும் இரண்டு அமர்வுகளுமாக இரண்டு நாள்களும் 4 அமர்வுகள் இடம்பெற்றன.

இறுதிநாள் நிகழ்வில், சிறப்புரையாற்றிய முஹம்மட் பின்த் ஹசன் அல்-செஹ்ரி முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்் திணைக்களத்தினால் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

சவூதி அரேபிய அரசின் பூரண அனுசரணையில் வரலாற்றில் முதல் தடவையாக இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் சவூதி அரேபிய மன்னருக்கும் மற்றும் சவூதி அரசுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் மாநகர சபையின் புதிய ஆணையாளருக்கு வரவேற்பு

(சியாஜ்)

புத்தளம் மாநகர சபையாக தரம் உயர்த்துப்பட்டதோடு புதிய ஆணையாளராக கடமைகளை பொறுப்பேற்ற எம் எம் நந்தன மஹிப்பாலவை வரவேற்கும் வகையில் தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் மாநகர சபை உறுப்பினர்கள் சந்தித்து கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளை உறுப்பினர்களால் புத்தளம் மாநகரசபையின் புதிய ஆணையாளர் நந்தன மஹீபால வெள்ளிக்கிழமை வரவேற்று கௌரவப்படுத்தியுள்ளனர்.

இதன்போது புத்தளத்தின் முக்கூட்டு தலைமையின் அவசியம் பற்றியும் ஜம்இய்யாவின் தேவைகள் பற்றியும் கலந்தலோசிக்கப்பட்டதுடன் புத்தளத்தில் நடைபெறும் அனைத்து அபிவிருத்திக்கும் ஜம்இய்யா ஒத்துழைப்பு வழங்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர்
Kalaikkathir

## தேசிய போர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியாற்றியவர்களுக்கு தேசம் தனது ஆழ்ந்த நன்றியையும், அசைக்க முடியாத மரியாதையையும் வெளிப்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாக இந்த நிகழ்வு அமைகிறது.

நாட்டின்படையினரைநினைவுகூருவதில் ஒற்றுமையுடன்நிற்குமாறுபாதுகாப்புஅமைச்சு அனைத்து மக்களையும் அழைக்கிறது. நாட்டையும்அதன்மக்களையும்பாதுகாப்பதில் அவர்களின் ஒப்பற்ற அர்ப்பணிப்புக்கு மரியாதை செலுத்துகின்றோம் என்றார்.

## தொடருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகளும்,தபால்தொடருந்துசேவைகளும் நிறுத்தப்பட்டன. இதனால் பயணிகள் பெரும் அசௌகரியத்தைஎதிர்கொண்டனர். அத்தோடு பெரும்பாலான தொடருந்து நிலையங்களில் பற்றுச்சீட்டுக்களும்விநியோகிக்கப்படவில்லை.

வேலை நிறுத்தம் தொடர்பில் அறிந்திராத பயணிகள்தொடருந்துநிலையங்களில்நீண்ட நேரம் காத்திருந்து அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். எவ்வாறிருப்பினும் வேலை நிறுத்தத்துக்கு மத்தியிலும் குறுகிய தூர தொடருந்துங்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு தொடருந்து திணைக்களம் நடவடிக்கை எடுத்தது. அதற்கமைய காலி, நீர்கொழும்பு மற்றும் வேயங்கொட போன்ற சில குறுகிய தூர தொடருந்துங்கள் மாத்திரமே நேற்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

இதுதொடர்பில்மேற்பார்வைசெய்வதற்காக தொடருந்துதிணைக்களபொதுமுகாமையாளர் தம்மிக ஜயசுந்தர கொழும்பு - மருதானை தொடருந்து நிலையத்துக்கு வருகை தந்திருந்தார். அவர் அங்கு செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோது, தொடருந்து நிலைய அதிபர்களின் வேலை நிறுத்தத்தால் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் 80 - 100 தொடருந்துங்களை சேவையில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அந்த சங்கத்தினருக்கு பேச்சுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. வேலை நிறுத்தம் தொடரும் பட்சத்தில் அதிக தொடருந்துகளை சேவையில் ஈடுபடுத்த முடியும் எனத் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும்ஒருவாரத்துக்குள்தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் காலவரையற்றவேலைநிறுத்தபோராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என தொடருந்து நிலைய அதிபர்கள் சங்கம் எச்சரித்துள்ளது. இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அந்தச் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன, எமது பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்காமல் ஆளும்தரப்பு காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிறது. அதற்கு எதிர்ப்பினைத் தெரிவிக்கும் வகையிலேயே அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

எமது முதலாவது சிவப்பு எச்சரிக்கை வெற்றி பெற்றுள்ளது. இதனால் மக்கள் எதிர்நோக்கிய அசௌகரியங்களுக்கு தொடருந்து நிலைய அதிகாரிகளும் ஆளும்தரப்புமே பொறுப்பு கூறவேண்டும். பேச்சு நேரத்தை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும், போக்குவரத்து அமைச்சர் அதனை உதாசீனப்படுத்தினார். பிரதி அமைச்சர் மாத்திரமே சாதகமான வகையில் செயற்படுகின்றார். இதேநிலைமை தொடர்ந்தால் காலவரையற்ற போராட்டத்தில் ஈடுபடுவோம் - என்றார்.

இந்ததிடீர் வேலைநிறுத்த போராட்டத்தை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு கண்டித்திருந்தது. அறிக்கையொன்றை வெளியிட்டு அமைச்சு கண்டனத்தை தெரிவித்திருந்தது. "இது ஒரு நியாயமற்ற நடவடிக்கையாகும். சாத்தியமான தீர்வுகள் நடைமுறையில் இருந்தபோதிலும் பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த போராட்டம் அமைந்திருந்தது" என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இவ்வேலைநிறுத்தமானது, திட்டமிடப்பட்ட ஐந்து ஆண்டுதர பதவி உயர்வுகளில் தாமதம் மற்றும் புதிய ஆட்சேர்ப்பு இல்லாதமை ஆகிய இரண்டு முக்கிய கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். 106 தொடருந்து நிலைய பொறுப்பதிகாரிகள் உட்பட தொடருந்துத் துறையில் 909 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு கடந்த ஜனவரி 22 அன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் துறைக்குள் உள்ள செயல்முறைகளில் ஏற்படும் தாமதங்கள் நியமனங்களிலும் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளன.

மேலும், பதவி உயர்வுகள் தொடர்பான பொருத்தமானபரிந்துரைகள்மே7தொடருந்து திணைக்களத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றை அடுத்த வாரம் பொது சேவை ஆணைக்குழுவின் ஒப்புதலுக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றை கலந்துரையாடல்கள் மூலம் தீர்ப்பதற்குப் பதிலாக, தொழிற்சங்க நடவடிக்கை தொடங்கப்பட்டது ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன் உண்மையான நோக்கம் ஆளும்தரப்புக்கு அழுத்தம் கொடுத்து பொது மக்களின் அன்றாட செயற்பாடுகளை சீர்குலைப்பதாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுகிறது. தொடருந்து நடவடிக்கைகளை பராமரிப்பதற்கும் துறை சார்ந்த குறைபாடுகளை தாமதமின்றி நிவர்த்தி செய்வதற்குமான உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகின்றோம்-என்றுபோக்குவரத்து அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டுமக்கள்தற்போதுபலகஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். வருமான மூலங்கள் இன்றி மக்களின் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது. பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. நாட்டு மக்களுக்குத் தேவையான உப்பைக் கூட இந்த அரசாங்கத்தால் வழங்க முடியாது போயுள்ளது.

நாட்டில் தற்போது வினைதிறன் அற்ற அரச நிர்வாகமே காணப்படுகின்றது. தற்போதைய ஆட்சியாளர்கள் பேசுவதில் மிகவும்திறமையானவர்களாக இருந்தாலும், மக்களின் பிரச்சினைகளுக்கு அவர்களிடம் பதில்களோ தீர்வுகளோ இல்லை. ஆளும் தரப்பினர் உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை நிறுவுவதற்கு எதிர்க்கட்சிக்கு உரிமை இல்லை என்று மிரட்டுகின்றனர்.

தற்போதுள்ள தேர்தல் முறைமையின் கீழ் மக்கள் அளிக்கும் வாக்குகளின் அடிப்படையில் அதிகாரத்தை அமைக்கும் உரிமை எதிர்க்கட்சிக்கும் காணப்படுகின்றன. எனவே உப்பைக்கூட சரியாக வழங்கமுடியாத அரசாங்கத்தின் இந்த அச்சுறுத்தல்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் அஞ்சாது.

எதிர்க்கட்சிக்குபெரும்பான்மைகாணப்படும் உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை நிலைநாட்டவும், ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்தவும் ஜனநாயக கட்டமைப்பிற்குள் எடுக்கமுடியுமான அதிகபட்ச நடவடிக்கைகளை ஐக்கிய மக்கள் சக்தி எடுக்கும். எதிர்க்கட்சி அதிகாரத்தைப் பெற்றால் அதிகபட்சமாக 3-4 மாதங்களே தக்க வைக்கும் என்று வதந்திகளைப் பரப்புவதன் மூலமும், போலிப் பிரச்சாரம் செய்வதன் மூலமும் எதிர்க்கட்சியை பலவீனப்படுத்த முடியாது.

எதிர்க்கட்சியை இல்லாதொழிக்க இந்த அரசாங்கம் தற்போது பல்வேறு தந்திரோபாயங்களைக் கையாண்டு வருகிறது. இவற்றுக்கு ஐக்கிய மக்கள் சக்தி சிக்கிக் கொள்ளாது. அரசாங்கத்தால் செய்ய முடியாததை, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் செய்து காட்டும். மக்களின் துன்பங்களைப் போக்கச் செய்வோம். தற்போதைய அரசாங்கம் வாய்போச்சு மூலம் மட்டுமல்லாது பொய்கள் மூலமும் மக்களை ஏமாற்றி வருகிறது.

உண்மை, நடைமுறையதார்த்தம் மற்றும் அபிவிருத்தி மூலம் மக்களை அதிகாரப்படுத்த ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கும். முக்கிய அரசியல்வாதிகள் தேர்தல் காலத்தில் தேர்தல் மேடைகளில் கலந்து கொள்வதைப் பாரக்கிறோம். இன்று அவர்கள் மக்கள் மத்தியில் செல்கிறார்கள் இல்லை.

தேர்தல் முடிந்த பின்னரும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி அரசியல்வாதிகள் மக்களுக்கான தமது உண்மையான கடமையையும் பொறுப்பையும் நிறைவேற்றி வருகின்றனர். தேர்தலுக்குப் பிறகும் மக்களின் பிரச்சினைகளை தொடர்ந்து ஆராய்ந்து, குறித்த பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு வர நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## பொதுப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை வழங்கியுள்ளோம். ஏற்கனவே மார்ச் 6 ஆம் திகதி வழங்கிய கடிதத்துக்கு ஜனாதிபதி தரப்பினரிடமிருந்து எவ்வித பதில்களும் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் நேற்று வழங்கப்பட்டுள்ள கடிதத்துக்கும் அவ்வாறானதொரு நிலையே ஏற்படலாம். மருத்துவ சங்கத்தால் வழங்கப்படும் கடிதம் ஜனாதிபதியிடம் உரியவாறு சென்றடைகிறதா? என்பது கேள்விக்குறியாக உள்ளது. பொறுப்புக் கூற வேண்டிய ஆளும்தரப்பினர் விபத்துகளை கட்டுப்படுத்த செயற்திறனான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். சுகாதார அமைச்சு, பொலிஸார் என சுமார் 80க்கும் அதிகமான அமைச்சுகளும் பிரிவுகளும் இதனுடன் தொடர்புடையன. ஆகையால் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டம் ஒன்றே எமக்கு அவசியம்.

இலங்கையில்பயணிகள்போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படுபவை பேருந்துகள் அல்ல அவை லொறிகளாகும். லொறியின் உடல் பாகத்தைக் கொண்டு அவை வடிவமைக்கப்பட்டுள்ளன. டூரிஸ்ட் பஸ் என்பதே பேருந்து. பேருந்துகளின் இறக்குமதிக்கு அதிகளவான தீர்வை வரி அறவிப்படுவதால், நாட்டில் உள்ளவர்கள் பயணிகள் போக்குவரத்துக்கு லொறிகளை கொள்வனவு செய்கின்றனர் - என்றார்.

இதேவேளை இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் சுரந்த பெரேரா தெரிவித்ததாவது:

நாட்டில் பதிவாகும் வீதி விபத்துக்களின் எண்ணிக்கையும், உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. பொது போக்குவரத்து வாகனங்களில் செல்வதற்கும் அஞ்ச வேண்டிய இக்கட்டான சூழல் உருவாகியுள்ளது. அண்மையில் கொத்மலை பகுதியில் 100 அடி பள்ளத்தில் கவிழ்ந்து பயணிகள் பேருந்தொன்று விபத்துக்குள்ளானதில்23பேர்உயிரிழந்ததுடன் 25 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இது மிகப்பெரிய உயிர் சேதமாகும்.

இவ்வாண்டுஜனவரி முதலாம் திகதி முதல் இதுவரையானகாலப்பகுதியில்சுமார்975பேர் விபத்துக்களில்சிக்கிஉயிரிழந்துள்ளனர். கடந்த 10 வருட காலப்பகுதியில் வருடாந்தம் 2300 தொடக்கம்2500இடைப்பட்ட உயிரிழப்புக்கள் விபத்துக்களால் பதிவாகுவதைக் காணக் கூடியதாக உள்ளது. அந்த வகையில் இதுவரை அண்ணளவாக 12 ஆயிரம் சாவுகள் பதிவாகியுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன. தொழிலுக்கு சென்றவர்கள் மீள வீடு திரும்புவார்களா? என நிச்சயமில்லாத நிலை உருவாகியுள்ளது என்றார்.

## ஆவா குழுவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையிலிருந்து தப்பிச் சென்று அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் கனடாவில் சட்டவிரோதமாக வசித்து வந்த நிலையில், அந்த நாட்டில் மனிதக் கொலை உட்பட பல குற்றங்களுக்காகத் தேடப்பட்டவர் எனக் கூறப்படுகிறது.

2022ஆம் ஆண்டு பிரான்ஸில் நடந்த ஒரு கொலை வழக்கில் சந்தேகநபரான இவர், கடந்த டிசெம்பரில் டொராண்டோவில் கைது செய்யப்பட்டு, தற்போது தடுப்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

'பிரசன்னா நல்லலிங்கம்' என்ற இலங்கையரை பிரான்சுக்கு நாடுகடத்துமாறு கனடாவின் ஒன்ராறியோ நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ரணில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையொன்றைவெளியிட்டுஇதனைத் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் சட்டத்தரணியால் என்னைப் பற்றி நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஊடகங்களில்செய்திகள்வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றில்நாடாளுமன்றஉறுப்பினர்சாமர சம்பத் தசநாயக்கவுக்கு வழங்கப்பட்டுள்ள பிணையைஇரத்துசெய்வதற்கானகோரிக்கை நீதிமன்றத்தால்நிராகரிக்கப்பட்டுள்ளதாகவோ, குற்றம்சாட்டப்பட்டவரின்சட்டத்தரணியால்முன் வைக்கப்பட்ட இந்த பிணை இரத்து கோரிக்கைக்கு ஆணைக்குழுவின் சட்டத்தரணியால் எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவோ குறிப்பிடப்படவில்லை.

ஏப்ரல் 28 ஆணைக்குழுவில் நான் வழங்கிய வாக்குமூலத்தில், அமைச்சர் சமந்த வித்தியாரத்னவினால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத்தின் சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதா என அவரது மனைவி என்னிடம்கேட்டார்என்றுகுறிப்பிட்டிருந்தேன். எவ்வாறிருப்பினும்நான்ஒருசட்டத்தரணியாக, எந்த வெளிப்படுத்தல்களையும் செய்யும் நிலையில் இல்லை என்று கூறினேன்.

அரசமைப்பின் 148, 149 மற்றும் 150ஆவது உறுப்புரைகளை நான் ஆணைக்குழுவில்முன்வைத்து, அதற்கமைய நாடாளுமன்றத்துக்கு பொது நிதி தொடர்பான முழுமையான அதிகாரம் காணப்படுவதோடு குறிப்பிட்ட நோக்கங்களுக்காக , சட்ட ரீதியாக ஒதுக்கப்படாத குடியரசின் நிதிகளுக்காக ஒரு ஒருங்கிணைந்த நிதியம் உருவாக்கப்பட வேண்டும். நிதியமைச்சர் பிறப்பித்த உத்தரவின் கீழ் தவிர, நிதியத்திலிருந்து பணத்தை எடுக்க முடியாது. அந்த சுற்றறிக்கை சட்டத்தின் மறு கூற்று மட்டுமே. சுற்றறிக்கை என்பது சட்டம் அல்ல. சட்டப்படி சரியான நடவடிக்கை என்னவென்றால், நிலையான வைப்புத்தொகையை திரும்பப் பெற்று, மாகாண வரவு செலவுத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட நோக்கங்களுக்காக அதைப் பயன்படுத்துவதுதான்.

இந்நிலையில் இது குறித்து என்பைப் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ள முரண்பாடான கருத்துக்கள்நீதிமன்றத்தைவேண்டுமென்றே தவறாக வழிநடத்துபவையாகும். அவை தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து எனது வழக்கறிஞர்களுடன் கலந்தாலோசிப்பேன். மேலும், இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு விசாரணையை எவ்வாறு நடத்தியது என்பது குறித்து அதன் தலைவருக்கு கடிதம் மூலம் தெளிவுபடுத்தியிருக்கின்றேன் என்றுள்ளது.



# மு.காவுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்க முயலும் முடிவை அதாவுல்லா மறுபரிசீலனை செய்யவேண்டும்

## யஹியாகான் எச்சரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

அக்கரைப்பற்று மக்களின் தீர்ப்பை தேசிய காங்கிரஸ் தலைவர் ஏற்க வேண்டும். முகாவை - அந்த மக்கள் முற்றாக நிராகரித்துள்ளனர். அட்டாளைச்சேனை பிரதேச சபை விடயத்தில் அதாவுல்லா தவறான முடிவுகளை எடுக்கக் கூடாது. அக்கரைப்பற்று மக்களின் நம்பிக்கையை அதாவுல்லா பாதுகாக்க வேண்டும். அங்கு அதிகாரத்தை பெற்று அட்டாளைச்சேனையில் மு.காவுடன் கூட்டுச் சேர்வது ஆரோக்கியமற்றது. மட்டுமன்றி - அட்டாளைச்சேனை பிரதேச சபையில் - முகாவுடன் இணைந்து ஆட்சியமைப்பது என்பது அதாவுல்லாவை படு குழியில் வீழ்த்தும் என்றும் ஐக்கிய மக்கள் காங்கிரஸ் செயலாளர் நாயகம் ஏ.சி. யஹியாகான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அக்கரைப்பற்று மக்களின் தீர்மானத்தை அதாவுல்லா புறந்தள்ளக் கூடாது. முஸ்லிம் காங்கிரஸின் பசப்பு வார்த்தைகளை நம்பி அதாவுல்லா செயற்படுவாராக இருந்தால் இனி வரும் தேர்தல்களில் தேசிய காங்கிரஸ் மண் கவ்வும் என்பதை உறுதியாக கூறி வைக்க விரும்புகிறேன்.

மக்களின் தீர்மானத்தை மதித்து முகாவுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைக்க முயலும் முடிவை அதாவுல்லா மறு பரிசீலனைக்கு உட்படுத்த



வேண்டும் என்றும் யஹியாகான் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் தமிழினப் படுகொலைகள் இடம்பெற்றது என்பதை ஏற்றுக்கொள்க

## பிரான்ஸ் அரசிடம் விக்கினேஸ்வரன் வலியுறுத்தல்

ஆர்மேனியாவிலும், ருவண்டாவிலும் இனப்படுகொலைகள் இடம்பெற்றன என்பதை பிரான்ஸ் அரசாங்கம் ஏற்றுக்கொண்டதைப்போன்று, இலங்கையிலும்தமிழினப்படுகொலைஇடம்பெற்றது என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளரும், முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினருமானசி.வி.விக்கினேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை நடைபெற்றதமிழர்களுக்கானபிரான்ஸ்நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் சி.வி.விக்கினேஸ்வரனின் காணொளி வடிவ உரை ஒளிபரப்பப்பட்டது.

அந்த உரையில் அவர் மேலும் கூறியதாவது -

வடமாகாண முதலமைச்சர் என்ற ரீதியில் என்னால் முன்மொழியப்பட்ட 'தமிழின அழிப்பு தீர்மானம்' கடந்த 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வடமாகாணசபையில் பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது.

அத்தீர்மானத்தின் ஊடாக இலங்கை அரசாங்கங்களால் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனவழிப்பு தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையால் விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும் எனவும், உள்ளக ரீதியில் ஸ்தாபிக்கப்பட்ட உண்மையை அறியும் ஆணைக்குழுக்கள்மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்திருப்பதால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நாடுவதற்கான வழிகாட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

இதுஇவ்வாறிருக்கஅண்மையகாலங்களில்வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிகள் அரச திணைக்களங்களால் சுவீகரிக்கப்பட்டுவருவதுடன், அரசகட்டமைப்புக்களின்அனுசரணையுடன்பௌத்த பிக்குகளால் தீவிர பௌத்த சிங்களமயமாக்கல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

பிரான்ஸில் 47 மாநகரசபைகள் இலங்கையில் தமிழினப்படுகொலை இடம்பெற்றது என்பதை ஏற்றுக்கொள்ளும் வகையில் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. அதனையொத்த தீர்மானங்கள் இந்தியாவின் தமிழக அரசாங்கத்தினாலும், கனேடிய நாடாளுமன்றத்தினாலும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் ஆர்மேனியாவிலும், ருவண்டாவிலும் இனப்படுகொலைகள் இடம்பெற்றன என்பதை பிரான்ஸ் அரசாங்கம் ஏற்றுக்கொண்டதைப்போன்று, இலங்கையிலும் தமிழினப்படுகொலை இடம்பெற்றது என்பதை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அத்தோடு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையின் 5 நிரந்தர உறுப்புநாடுகளில் ஒன்றான பிரான்ஸ், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்வதற்கான தலைமைத்துவத்தை வழங்கவேண்டும் எனவும் வலியுறுத்துகிறோம் எனத் தெரிவித்தார்.



# தம்பலகாமத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி

திருகோணமலை மாவட்ட தம்பலகாமம் நான்கு வாசல் பிள்ளையார் கோயில் சந்தியில் முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி வழங்கப்பட்டது.

நேற்று (சனிக்கிழமை) காலை கொட்டும் கனமழையிலும் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

இதனை இலங்கை தமிழரசு கட்சியின் தம்பலகாமம் பிரதேசசபைக்கு உறுப்பினர்களாக தெரிவாகியவர்களின் ஏற்பாட்டிலும் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தினை முன்னிட்டு, கடந்த யுத்தத்தில் உயிரிழந்த மக்களை நினைவுகூரும் நிகழ்வுகள் நீடித்த வலியையும், அரசால் மறுக்கப்படும் நீதிக்கான மக்களின் போராட்டத்தையும் வெளிப்படுத்தும் முக்கியமான வலையொலியாக மாறியுள்ளன.





இதன் போது இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து ஒரு நிமிட மௌன அஞ்சலியும் இடம் பெற்றது.

இந்நிகழ்வில், காணாமற்போனோரின் உறவுகள், கிராமப்புற மக்களும், சமூகச்செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டு தங்கள் துயர அனுபவங்களைப் பகிர்ந்ததோடு, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வாழ்வுகளைப் பற்றி பேசினர். நிகழ்வு, சமூக நினைவாற்றலை பாதுகாத்து, இனநீக்கம், உயிரிழப்பு மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிரான மக்களின் எதிர்வினையாகவும் அமைந்தது.

இதன் போது கிண்ணியா தம்பலகாமம் பிரதான வீதியில் பயணிப்போரும் முள்ளிவாய்கால் கஞ்சியை பருகினர். இதில் பெரும்பாலனோர்கள் கொட்டும் கனமழையிலும் கலந்து கொண்டிருந்தனர்.



## காற்றுடன் கூடிய கனமழையினால் தம்பலகாமத்தில் வீடுகளுக்கு பாதிப்பு

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் நேற்று (சனிக்கிழமை) காலை பெய்த கனமழை உடனான கூடிய காற்றினால் வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தம்பலகாமம் பிரதேச பகுதியின் கல்மெடியாவ தெற்கு கிராம சேவகர், வடக்கு மற்றும் பாரதிபுரம் உட்பட பல இடங்களில் உள்ள வீடுகளின் கூரைகள் மற்றும் கட்டடங்களும் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கின்றனர்.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

•CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
•NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
•வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
•ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
•GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# தேசிய மக்கள் சக்தி அரசைக் கவிழ்க்க ரணிலைச் சூழ்வது நகைப்பிற்குரியது

## இளங்குமரன் எம்.பி. கிண்டல்

(சுபேசன்)




சிறப்பாக செயற்பட்டுவருகின்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை கவிழ்க்கஎதிர்கட்சிகள் மக்களால் விரட்டியடிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவைச் சூழ்வது நகைப்புக்குரிய விடயம் என தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்; -

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடந்து முடிந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் 266 சபைகளில் பெரும்பான்மையைப் பெற்றுள்ளது. முன்னைய அரசாங்கங்கள் உள்ளூராட்சிசபைகளில் இவ்வாறான வெற்றியைப் பெற்ற வரலாறு இல்லை.

இந்நிலையில் மக்கள் ஆணையைப் பெறாத கட்சிகள் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஒன்றுசேர்கிறார்கள் என்ற செய்தி பேசுபொருளாகக் காணப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவினை நாட்டு மக்கள் அடியோடு விரட்டியடித்தனர். நாம் மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்தினோம்.

கடந்த காலத்தில் உள்ளூராட்சிசபைத் தேர்தலை பிற்போட்டவர் தான் இந்த ரணில் விக்கிரமசிங்க. அவ்வாறான நிலையில் இன்று ரணில் தலைமையில் அணி திரள்வதான மாயையை ஏற்படுத்துகின்றனர்.

மக்கள் ஆணையைப் பெற முடியாதவர்கள் வேறு வழியின்றி தமக்குள் அணி சேர்கின்றனர். முதலில் மக்களின் ஆதரவைப் பெறுங்கள்.

நாம் மக்கள் எமக்கு வழங்கிய ஆணையைக் கொண்டு நாட்டினை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பணியில் ஈடுபடுகிறோம்.

மக்கள் ஆணையைப் பெறாதவர்களுடைய செயற்பாடுகளைநாம்கண்டுகொள்ளப்போவதில்லை.

தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சித் தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளது. அதனைக் கொண்டு சிறப்பான சேவையை வழங்குவோம். - என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# அசுத்தமாக காட்சியளிக்கும் காத்தான்குடி கடற்கரை

(பர்ஸான்)

மட்டக்களப்பு - காத்தான்குடி கடற்கரை பகுதி அசுத்தமாக காட்சியளிக்கிறது.

அங்கு வரும் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் உணவுக் கழிவுகள் மற்றும் பிலாஸ்ரிக், பொலித்தீன் ஆகிய பொருள்களை கண்ட கண்ட இடத்தில் வீசிச் செல்கின்றனர்.

இதனால் கடற்கரைப் பகுதி அசுத்தமாக காணப்படுகின்றன. இவ்வாறு குறித்த கடற்கரைப் பகுதி சில நாள்களாக கழிவுகள் அகற்றப்படாத நிலையில் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.





அத்துடன், அங்கு பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாக கட்டாக்காலி நாய்களும் அலைந்து திரிகின்றன.

இவ்வாறான விடயங்களை காத்தான்குடி நகர சபை நிர்வாகம் கவனத்திற் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டிக் கொள்கின்றனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.05.2025இல் வெளியிடப்பெற்றது